## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 584** **நாள்: 18.10.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரூபாய் 30 க்கு சன்னரக அரிசி மற்றும் ஆறு வகையான மளிகைப் பொருட்கள் குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கிடும் திட்டத்தினை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்கள் இன்று தொடங்கிவைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழகத்தில் உணவுப் பொருட்கள் விலை ஏற்றத்தின் காரணமாக மக்கள் பாதிப்படைவதைத் தவிர்க்கும் பொருட்டு ,மக்கள் பயன்படும் வகையில் ரூபாய் 30 க்கு சன்னரக அரிசி மற்றும் ஆறு வகையான மளிகைப் பொருட்கள் சந்தை விலையை விடக் குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கிடும் திட்டத்தினை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் அவர்கள் இன்று (18.10.2026) ரிப்பன் கட்டட கூட்டுறவு பண்டக சாலையில் தொடங்கி வைத்து மக்களுக்கு அரிசி மற்றும் ஆறு மளிகைப்பொருட்களை குறைந்த விலையில் வழங்கினார்.

தமிழகத்தில் உணவுப் பொருட்கள் விலை ஏற்றத்தின் காரணமாக மக்கள் பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு சந்தை தலையீட்டின் மூலம் மக்கள் பயன்படும் வகையில் ரூபாய் 30-க்கு சன்னரக அரிசி மற்றும் ஆறு வகையான மளிகை பொருட்கள் சந்தை விலையை விட குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கிட தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் ரூபாய் 30-க்கு சன்ன ரக அரிசி மற்றும் புழுங்கல் பொன்னி அரிசி, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பூண்டு, மல்லி (தனியா) மற்றும் மிளகாய் உள்ளிட்ட ஆறு வகையான மளிகை பொருட்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சென்னை ராஜா அண்ணாமலை அரங்கத்தில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் 17.10.2026 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது.

சென்னை மண்டலத்தில் 19 கூட்டுறவு அங்காடிகள் மூலம் 17.10.2026 அன்று சன்னரக அரிசி 10,400 கிலோ ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 19 கூட்டுறவு அங்காடிகளால் 5,800 கிலோ சன்னரக அரிசி பெறப்பட்டு அதில் 494 கிலோ அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் இன்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு. க. தர்ப்பகராஜ், இ.ஆ.ப., மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**